**சென்னை அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை: திரு. N. ராமநாதன், B.A., B.L.,**

**ந.க.எண்.5856/2015/இ2** **நாள்: 21 .01.2021.**

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை - திரு. ஆ. நிர்மல்குமார், இளநிலை உதவியாளர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை - பணிவரன்முறை செய்து - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1) தலைவர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.5856/2015/இ2, நாள்.30.06.2017.

2) அரசாணை (டி) எண்.261, வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை, நாள்.30.12.2020

**ஆணை:**

திரு. ஆ. நிர்மல்குமார் என்பவர் தலைவர், தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை அவர்களின் பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இவ்வலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியாளர் 03.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

அரசாணை (டி)எண்.261, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள்.30.12.2020-ன்படி திரு. ஆ. நிர்மல்குமார், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் அவர் பதவி ஏற்ற நாளான 03.07.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கப்பட்ட தனியாளரது பணியினை அவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 03.07.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியாளரின் தகுதிகாண்பருவம் 03.07.2017 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருத்தப்படுகிறார்.

மேலும், தகுதிகாண் பருவகாலத்தில் தனியாளர் கீழ்காணும் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

1. Tamil Nadu Government Office manual Test
2. பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி

21.01.21

தலைவர்
தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத்
தீர்ப்பாயம், சென்னை-104.

பெறுநர்

திரு. ஆ. நிர்மல்குமார், இளநிலை உதவியாளர்,
தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், சென்னை.

நகல்:

உதிரி-1

21.01.21

Scanned with CamScanner